


# சத்யராஜ் இவருக்கு சிலை வைக்கப் போகிறார்! ஏன்?



சத்யராஜ்

நதி நீர் இணைப்பு சாத்தியமா? இல்லையா? என்பதைப் பற்றி நாடே விவாதித்துக் கொண்டிருக்க, சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்பே, காளிங்கராயன் என்ற மன்னன் இதைச் சாதித்திருக்கிறான். இந்தத் தகவல் நமக்குக் கிடைத்தவுடன் மேலும் விசாரித்தபோது வியப்பான பல விஷயங்கள் நமக்குக் கிடைத்தன.

தமிழகமே தண்ணீருக்கு விக்கிக் கொண்டிருக்கும் வேளையிலும், ஈரோட்டைச் சுற்றியுள்ள பகுதி மட்டும் செழிப்பாக இருக்கிறது. அதற்குக் காரணம், அங்குள்ள 'காளிங்கராயன் வாய்க்கால்' இன்னும் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த



காளிங்கராயர் அணை



'கொங்கு மன்னன்' காளிங்கராயன்

வாய்க்காலை பவானி ஆற்றிலிருந்து வெட்டி வந்த காளிங்கராயன் பரம்பரையினர் இன்றும் நம்மோடு வாழ்ந்து வருகிறார்கள் என்றும், அவர்களில் ஒருவர் நடிகர் சத்யராஜ் என்ற தகவலும் தெரிய வந்தது. நம்ப முடியாமல் நாம்

## வெளிவராத சுவாரஸ்ய தகவல்!

"என் தாத்தா பேர் நடராஜ காளிங்கராயன் என்றதுமே அதிர்ந்துபோயி 'முருகா முருகா' என்று தலையில் அடித்துக் கொண்டார்!"

உடனே சத்யராஜிற்கு வலை வீசினோம்.

'ராவுத்தர் பில்டிங்' வளாகத்தில் அய்யர் ஐ.பி.எஸ். படப்பிடிப்பில் இருந்த சத்யராஜைப் பார்த்து "சத்யராஜ் ஜமீன்தாருக்கு வணக்கம்'' என்றதும் திகைத்துப் போனார். "இது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்றவர்,

"பொதுவா எனக்குப் பழைய பெருமை பேசறது பிடிக்காது. அதுவும் நான் ஜமீன் பரம்பரை என்று சொன்னதால ஆரம்பத்துல என் சினிமா வாய்ப்பே போச்சு. பின்ன எப்படி அதைச் சொல்றது? முதன் முதலா சிவகுமார் என்னை தேவர் பிலிம்சுக்குக் கூட்டிட்டுப் போனார். அங்க தேவர் என்னப் பார்த்துட்டு, 'பல்டி அடிக்கத் தெரியுமா?' என்று கேட்டார். நானும் உடனே, கட்டாந்தரையில பல்டி அடிச்சேன்.

தேவருக்குத் திருப்தியாகிடுச்சு. அப்புறம் என்னப் பத்தி விசாரிச்சார். 'நீ நம்மூரு பையனா?' என்றவரிடம், 'என் தாத்தா பேர் நடராஜ காளிங்கராயன்' என்றதுமே, அதிர்ந்துபோயி 'முருகா, முருகா' என்று தலையில் அடித்துக் கொண்டவர், 'நீயெல்லாம் சினிமாவுல நடிக்கலாமா?' என்று சத்தம் போட்டு எனக்கு வாய்ப்பு தரவில்லை.



பரம்பரை வீடு

அப்புறம் எப்படி நான் காளிங்க ராயன் பரம்பரைன்னு சொல்லுவேன்'' என்று சிரித்தார். நாம் வாய்க்காலைப் பற்றி நினைவூட்டியதும், சட்டென்று சீரியஸான முகத்துடன், இதுவரை வெளிவராத வரலாற்றைச் சொல்லி நம்மை வியப்பில் ஆழ்த்தினார்.

"பல நூறு வருஷத்திற்கு முன்னால் 'வெள்ளோடு' என்ற ஊரை மையமா வைத்து ஆண்டு வந்தவன் காளிங்க ராயன். அவனோட வம்சாவளியினர் தான் என்னோட தாயார் நாதம்மாள். நாங்க 36-வது தலைமுறை. இன்னும் சிலர் ஊத்துக்குளியில் அரண்மனை கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இதுல பெரிய சோகம் என்னன்னா, அந்த வாய்க்கால் நீரை காளிங்கராயன் பரம்பரையினர் யாரும் பயன்படுத்த மாட்டோம்'' என்று கூறி நம் விழிகளை விரிய வைத்தார்.

"இப்பொழுது தமிழ்நாட்டை உலுக்கும் தண்ணீர்ப் பஞ்சம்போல், அப்பொழுதும் ஏற்பட்டிருக்கு. அதனால் இப்பகுதி மக்களும், விவசாய நிலங்களும் கடுமையாக பாதிப்படைந் திருக்கிறது. இதைக் கேள்விப்பட்ட குறுநில மன்னனான காளிங்கராயன் துடித்துப்போய், அன்றைய மதுரையை ஆண்ட வீரபாண்டிய மன்னனிடம் சென்று உதவி கேட்க, உடனே ஒப்புதல் வழங்கிய மதுரை மன்னன், காளிங்க ராயன் ஆண்டு வந்த பகுதியின் வரி வசூலிக்கும் உரிமையையும் அவனுக்கே வழங்கினான்.

அந்த உற்சாகத்தோடு ஊருக்குத் திரும்பியவன், தன் கொங்கு இன மக்களைத் திரட்டி இரவு-பகல் பாராமல் வாய்க்காலை வெட்டி யிருக்கிறான். பவானியின் குறுக்கே ஒரு சிறு அணையைக் கட்டி அங்கிருந்து கொடுமுடி வரை 95 கி.மீ.க்கு மேல் இந்த வாய்க்கால் செல்லும் படியும், இதனால் 50 கிராம மக்களும் பல ஆயிரக்கணக் கான ஏக்கர் விளைநிலங்களும் பயன்பெறும்படியும் செய்ததுதான் காளிங்கராயனின் மதிநுட்பம்.

இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இதைத் தடுக்க சிலர் முயன்றுள்ளனர். இவர்கள் காளிங்கராயனுக்கு எதிராக மக்களைத் திசை திருப்ப, ஊர் முழுக்க தவறான செய்தியைப் பரப்பிவிட்டனர். அதாவது தனக்குச் சொந்தமாக இருக்கும் பல ஏக்கர் விவசாய நிலங்களைச் செழிக்க வைக்கத்தான் மக்கள் வரிப்பணத்தில் வாய்க்கால் வெட்டுகிறான் என்று கூற, இந்தத் தகவல் காளிங்கராயன் கவனத் திற்கும் போனது.

அவன் உடனே மக்களைக் கூப்பிட்டு, 'தரிசாகக் கிடக்கும் விளை நிலங்களை வளமாக்கவும், மக்களின் தாகம் தீர்க்கவும்தான் இந்த வாய்க்கால். என் சுயநலத்திற்காக அல்ல' என்று கூறியதோடு, அந்த அதிரடி வாக்குறுதி யையும் தந்தான். அதாவது 'இந்த வாய்க்கால் நீரை நான் மட்டும் அல்ல, என் வம்சாவளியினர் யாரும் பயன் படுத்தமாட்டார்கள்' என்று எல்லோ ரையும் நெகிழ வைத்தான் காளிங்க ராயன்.

அதற்கு நன்றியாக இப்பவும் அவனுடைய பெயரில் 'காளிங்க ராயன்பாளையம்' என்று ஒரு ஊரே இருக்கிறது.

விஞ்ஞான வளர்ச்சியும், தொழில் நுட்ப வசதியும் இல்லாத காலத்தில் அணைப்பகுதியை அவன் வடி வமைத்த விதத்தை வியந்து பாராட்டி பிரிட்டிஷ்காரர்கள் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். இப்போதுதான் எங்க கொங்கு எழுத்தாளர் பாஸ்கரதாசன் இதை ஆய்வு செய்து எழுதியிருக்கிறார். நானும் என் பங்கிற்கு அந்தத் தியாகிக்கு- என் பாட்டனுக்கு- பவானியில் சிலை வைக்கிறதாக இருக்கிறேன். இப்பொழு தெல்லாம் சரித்திர நாயகர்களை சாதி அமைப்புகள் தூக்கிப் பிடித்து அவர் களுக்கு சாதி முத்திரை குத்தப் பார்க் கிறார்கள். இது தவறு. காளிங்கராயன் போன்ற வரலாற்றுத் தியாகிகளை எல்லா மக்களும் சேர்ந்து கொண் டாடணும்'' என்று அவர் சொல்லி முடித்தபோது உணர்ச்சிப் பிழம் பாயிருந்தார்.

தண்ணீரின் தேவையை உணர்த் திய தீர்க்கதரிசியின் தியாக வரலாற்றைக் கேட்ட திருப்தியோடு, சத்யராஜிடம், ஸாரி, சத்யராஜ் காளிங்கராயரிடம் விடை பெற்றுக் கிளம்பினோம்.

-தேனி கண்ணன்

"சரித்திர நாயகர்களை சாதி அமைப்புகள் தூக்கிப் பிடித்து அவர்களுக்கு சாதி முத்திரை குத்தப் பார்க்கிறார்கள்!"

"விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலத்தில் அணை கட்டியதை பிரிட்டிஷ்காரர்கள் வியந்து பாராட்டினார்கள்!"



கிருஷ்ணராஜ காளிங்கராயர்